www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR12Bio

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

**வகுப்பு 12**

**உயிரியல்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 70

குறிப்பு: பகுதி-I (உயிரி-தாவரவியல்), பகுதி-II (உயிரி-விலங்கியல்) இரண்டும் தனித்தனி விடைத்தாளில் விடையளிக்கவும்.

**பகுதி - I (உயிரி-தாவரவியல்)** மதிப்பெண்கள்: 35

**பிரிவு - 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **8×1=8**

1) கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது பெரு கேமிட்டகத் தாவரத்தைக் குறிக்கிறது?
அ) சூல்திசு ஆ) சூல் இ) கருவூண் திசு ஈ) கருப்பை

2) ஒங்குதன்மை மறைத்தலின் விகிதமானது
அ) 9 : 3 : 4 ஆ) 9 : 3: 3: 1 இ) 9 : 6 : 1 ஈ) 12 : 3 : 1

3) எத்திடியம் புரோமைடு எந்த தொழில்நுட்ப முறையில் பயன்படுத்தப்படுகிறது?
அ) சதர்ன் ஒற்றியெடுப்பு தொழில்நுட்பமுறை
ஆ) வெஸ்டர்ன் ஒற்றியெடுப்பு தொழில்நுட்பமுறை
இ) பாலிமரேஸ் சங்கிலி தொடர்வினை
ஈ) அகரோஸ் இழும மின்னாற்பிரிப்பு

4) பிரிகூறுவிலிருந்து தாவரங்களை மீளுருவாக்கம் செய்யும் செயல் முறையினை தேர்வு செய்க
அ) உடலகருவாக்கம் ஆ) திசுவளர்ப்பு முறை
இ) புரோட்டோபிளாச இணைவு ஈ) ஆக்குத்திசு வளர்ப்பு

5) பாவனை செயல்களில் எது மலர் பாவனை செயலை சார்ந்தது
அ) காராசிஸ் மோரோஸஸ் ஆ) ஒஃபிரிஸ் ஆர்கிட்
இ) ஃபில்லியம் ஃப்ராண்டோசம் ஈ) அக்கேஷியா எறும்பு

6) காடுகள் அழித்தல் எதை முன்னிறுத்திச் செல்லவதில்லை
அ) மாற்றியமைக்கப்பட்ட உள்ளூர் வானிலை
ஆ) வேகமான ஊட்டச்சத்து சுழற்சி
இ) இயற்கை வாழிட வானிலை நிலை அழிதல் ஈ) மண் அரிப்பு

7) கோதுமை இரகங்களான சோனாரா 63, சோனாரா 64, ஆகியவை எந்த நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டன.
அ) சைனா ஆ) பிலிப்பைன்ஸ் இ) மெக்சிகோ ஈ) ஜெர்மனி

8) டெக்டோனா கிராண்டிஸ் என்பது ............ குடும்பத்தின் தாவரம்
அ) டிப்டீரோகார்பேசி ஆ) லேமியேசி இ) எபினேசி ஈ) பேபேசி

**பிரிவு - 2**

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **4×2=8**

9) ஸ்டோமியம் என்றால் என்ன?

10) மெண்டலியத்தை மறு ஆய்வு செய்து கண்டறிந்த அறிவியல் அறிஞர்களின் பெயர்களை எழுதுக.

11) pBR 322 எனும் வார்த்தையிலிருந்து நீர் அறிந்துக் கொள்வது என்ன?

12) கூட்டு பரிமாணமம் என்றால் என்ன?

13) கீழ்க்கண்ட தரவுகளைக் கொண்டு உணவு சங்கிலியை உண்டாக்குக
பருந்து, தாவரங்கள், தவளை, பாம்பு, வெட்டுக்கிளி

14) இயற்கை வேளாண்மை வரையறையைத் தருக

**பிரிவு - 3**

**ஏதேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா எண்: 19)** **3×3=9**

15) டபீட்டத்தின் பணிகள் யாவை?

16) மடியத்தின் முக்கியத்துவங்கள் எவையேனும் மூன்றினைப் பட்டியலிடுக

17) சூழ்நிலையியல் படிநிலைகள் என்றால் என்ன? பல்வேறு சூழ்நிலையியல் படிநிலைகளை எழுதுக.

18) ஸ்பைரூலினா போன்ற நுண்ணுயிர்களை வளர்ப்பதற்கு எந்த பொருட்கள் பயன்படுததப்படுகிறது?

19) பயிர் பெருக்கத்தின் குறிக்கோள்கள் யாவை? (ஏதேனும் மூன்று)

**பிரிவு - 4**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **2×5=10**

20) அ) கருவுறாக் கனி பற்றி விரிவான தொகுப்பு தருக. அதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பு சேர்க்க.

**(அல்லது)**

ஆ) முழுபெறா ஒங்குத்தன்மை மற்றும் இணை ஒங்குத் தன்மையை வேறுபடுத்துக.

21) அ) நீர் வாழ் தாவரங்களின் வகைகளை அதன் எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்

**(அல்லது)**

ஆ) அரிசி மற்றும் தேக்கின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## PART - B (உயிரி - விலங்கியல்) மதிப்பெண்கள்: 35

**I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்: 8×1=8**

1) எவ்வகை இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் தோன்றும்?
அ) பாலிலி இனப்பெருக்கம் ஆ) கன்னி இனப்பெருக்கம்
இ) பாலினப்பெருக்கம் ஈ) அ மற்றும் ஆ இரண்டும்

2) வரிசை I மற்றும் வரிசை IIஐ பொருத்தி சரியான விடையைத் தெரிவு செய்யவும்.

| I | | II |
|---|---|---|
| A) தாமிரம் வெளிவிடு IUD | - | i) LNG - 20 |
| B) ஹார்மோன் வெளிவிடு IUD | - | ii) லிப்பஸ் வளைய IUD |
| C) மருந்தில்லா IUD | - | iii) சாஹெலி |
| D) மாத்திரைகள் | - | iv) Multiload - 375 |

அ) A-(iv), B-(ii), C-(i), D-(iii) ஆ) A-(iv), B-(i), C-(iii), D-(ii)
இ) A-(i), B-(iv), C-(ii), D-(iii) ஈ) A-(iv), B-(i), C-(ii), D-(iii)

3) ஒரு குடும்பத்தில் மூன்று குழந்தைகள், A, AB மற்றும் B என்ற இரத்த வகைகளைக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் பெற்றோர்கள் எவ்வகையான மரபு வகை விகிதத்தை கொண்டிருப்பார்கள்?
அ) $I^AI^B$ மற்றும் $I^OI^O$ ஆ) $I^AI^O$ மற்றும் $I^BI^O$
இ) $I^BI^B$ மற்றும் $I^AI^A$ ஈ) $I^AI^A$ மற்றும் $I^OI^O$

4) தூது RNA மூலக்கூறு எம்முறையில் உருவாக்கப்படுகிறது?
அ) இரட்டிப்பாதல் ஆ) படியெடுத்தல் இ) நகலாக்கம் ஈ) மொழிபெயர்த்தல்

5) ஊர்வன இனத்தின் பொற்காலம்
அ) மீசோசோயிக் பெருங்காலம் ஆ) சீனோசோயிக் பெருங்காலம்
இ) பேலியோசோயிக் பெருங்காலம் ஈ) புரோட்டிரோசோயிக் பெருங்காலம்

6) சிற்றினங்களுக்கிடையே போட்டி காரணமாக ஏற்படுவது
அ) உயிரின மறைவு ஆ) திடீர் மாற்றம்
இ) தொந்தரவு வாழ்க்கை ஈ) கூட்டுயிரி வாழ்க்கை

7) பின்வருவனவற்றில் எது சூழல் உள் பாதுகாப்பு வகையைச் சார்ந்தது அல்ல?
அ) புகலிடங்கள் ஆ) தேசிய பூங்காக்கள்
இ) விலங்கியல் பூங்காக்கள் ஈ) உயிர்கோள் காப்பிடம்

8) ஸ்ட்ரேட்டோஸ்பியரின் ஓசோன் அடுக்கின் தடிமனை அளவிட பயன்படுவது
அ) ஸீவர்ஸ் அலகு (SU) ஆ) டாப்சன் அலகு
இ) மெல்சன் அலகு ஈ) பீஃபோர்ட் அளவுகோல்

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 4×2=8**

9) தன் கருவுறுதல் என்றால் என்ன?
10) அண்டம் விடுபடுதல் என்றால் என்ன? இது மாதவிடாய் சுழற்சியின் எத்தனையாவது நாளில் நடைபெறும்?
11) கோசர்வேட்டுகள் என்றால் என்ன?
12) தடுப்பு மருந்துகள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
13) உயிரியத் தீர்வு என்றால் என்ன?
14) வரையறு: சிறு வாழிடம்

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்: 3×3=9**

15) இன்ஹிபின் என்றால் என்ன? அதன் பணிகள் யாவை?
16) வாடகைத் தாய்மை என்றால் என்ன? (அல்லது) ஒரு பெண்ணுக்காக மற்றொரு பெண் குழந்தையைப் பெற்றுத்தர முடியுமா?
17) மனித மரபணுத்தொகுதித் திட்டத்தின் இலக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக.
18) ஒற்றைச் செல் புரதம் குறிப்பு வரைக. அவற்றின் பயன்களை எழுதுக.
19) உடல்செல் மரபணு சிகிச்சை மற்றும் இனச்செல் மரபணு சிகிச்சை வேறுபடுத்துக.

**IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2×5=10**

20) அ) ஏதேனும் ஐந்து இனப்பெருக்க துணை தொழில்நுட்பங்களை விளக்குக.

**(அல்லது)**

ஆ) மரபு அடிப்படையில் மனிதனின் ABO இரத்த வகையை விவரி.

21) அ) இம்யுனோ குளோபுலின் அமைப்பை படத்துடன் விவரி.

**(அல்லது)**

ஆ) உயிரிய பல்வகைத் தன்மையின் இழப்பிற்கான பல்வேறு காரணங்களை பட்டியலிடுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com